1996 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: இது எப்படிப் பாயின்ட் ஆப் ஆர்டராக வரும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம் நீங்கள் அறையில் என்னிடம் கேட்டீர்கள். அனுமதி மறுத்துவிட்டேன். அதே பிரச்சினை என்றால் நான் அனுமதி தரமுடியாது. நீங்கள் உட்காருங்கள். திரு. ரங்கநாதன். (குறுக்கீடு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சேலத்தில் நடைபெற்றது திராவிட முன்னேற்றக் கழக மாவட்டக் கழகக் கட்டிடத்திற்காக (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெற்ற கட்சி விழா. அது அரசு விழா அல்ல என்பதை சாதாரண அறிவு படைத்தவர்கள்கூடத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உறுப்பினருக்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் உட்காரவேண்டும், அல்லது நடவடிக்கை எடுப்பேன். அவர் பேசுவது அவைக் குறிப்பில் இடம்பெறாது.

(ஆ) தெலுங்கு-கங்கைத் திட்ட கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டு வருதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் ஆந்திர மாநிலத்தில் ராயலசீமா பகுதியிலே அமைந்திருக்கிற வெள்ளக்கோடு என்ற ஒரு இடத்தில் நேற்று ஆந்திர மாநில முதலமைச்சர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள் கர்நூல் மாவட்டத்தினுடைய ஏறத்தாழ 27,000 ஏக்கர் பயிர் சாகுபடிக்கு அந்த தெலுங்கு கங்கை நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீரைத் திறந்துவிட்டுள்ளார்கள். நம்முடைய பகுதிக்கும் நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நமது பகுதியிலே அமைந்துள்ள அந்தக் குடிதண்ணீர்த் தேவைகளை எப்போது நிறைவு செய்யமுடியும், எப்போது நமது சென்னைக்குக் குடிதண்ணீர், கிருஷ்ணா நதியிலிருந்து

[திரு. ப. ரங்கநாதன்] [1996 ஆகஸ்ட் 6

தெலுங்கு கங்கைத் திட்டத்தின் கீழ் வரும்? அது சென்னைக்கு எப்போது வரும், எந்தத் தேதியில் வரும், எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் ஒரு நாளைக்கு வரும் என்பதையும் நீங்கள் குறிப்பிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கடந்த பல ஆண்டுகளாக அடுத்த மாதம் வருகிறது, அடுத்த மாதம் வருகிறது என்று பத்திரிகையிலே செய்திகள் வருகின்றன. ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு, நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். இந்த 'இஷ்யூ'வில் நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி அவர்கள் உட்கார்ந்து கொண்டே அவையை நடத்தக்கூடாது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, முதலில் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள். பொதுவாக, உறுப்பினர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையைப் பற்றிக் கேட்க வேண்டுமேயானால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தமது இருக்கையிலிருந்து, குறிப்பிட்ட அமைச்சரைப் பார்த்து நீங்கள் தயாரா என்று கேட்பார்கள். ஆனால் நம்முடைய திரு. ரங்கநாதன் அங்கிருந்து ஒரு பத்திரிகையைக் காண்பித்தார். நான் என்ன நினைத்துக் கொண்டேன் என்றால், ஏதோ ரெக்கமன்டேஷன் என்று நினைத்துக்கொண்டு, கேள்வி நேரம் முடிந்த பிறகு வாருங்கள் என்று சொன்னேன். ஆனால், அதற்குப் பிறகு அவர் எழுதியிருக்கும் பேப்பரைக் காண்பிக்கிறார். இருந்தாலும், அவர் கேட்டுவிட்ட காரணத்தால், நான் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் கேட்டார்கள். அவர்கள் கேட்டதற்குத்தான் நான் பதில் சொன்னேன். ராயலசீமா பகுதிக்கு, ஆந்திர முதலமைச்சர் அவர்கள் தெலுங்கு-கங்கைத் திட்டத்திலிருந்து தண்ணீரைப் பாசனத்திற்காகத் திறந்துவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சிகரமான ஒரு செய்திதான். ஸ்ரீசைலம் அணைக்கட்டிலிருந்து பூண்டி வரையிலே வருகிற அந்தக் கால்வாய்க்கு, ஆந்திர எல்லை வரையிலே தெலுங்கு-கங்கைத் திட்டம் என்று பெயர். தமிழ்நாட்டின் எல்லைக்குள் அதற்கு கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் என்று பெயர்.

1996 ஆகஸ்ட் 6] [திரு. துரைமுருகன்]

ராயலசீமா மிக வறண்ட பகுதி. இந்தத் திட்டம் போடுகிறபோது, அந்தப் பகுதிக்குத் தண்ணீர் தரவேண்டும் என்பது அதனுடைய ஷரத்துக்களில் ஒன்று. எனவே, ஸ்ரீசைலம் அணைக்கட்டிலே, அதனுடைய பிற்பகுதியிலே போத்திரெட்டிப்பட்டு என்ற இடத்திலே தண்ணீர் எடுக்கிறார்கள். போத்திரெட்டிப்பட்டு-பனகசாலா ரெகுலேட்டர், பனகசாலா ரெகுலேட்டர்-பெலுகோடு ரிசர்வாயர், பெலுகோடு ரிசர்வாயர்-செண்ணமுகப்பள்ளி, செண்ணமுகப்பள்ளி -பெர்மகாரிமடம், செண்ணமுகப்பள்ளி-வடப்பண்ணை, வடப்பண்ணை-சோமசீலா, சோமசீலா-கண்டலேறு, கண்டலேறு-சத்தியவேடு, சத்தியவேடு-ஊத்துக்கோட்டை, ஊத்துக்கோட்டை-பூண்டி, பூண்டி-மெட்ராஸ். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது சென்னை, இதுதான் தெலுங்கு கங்கைத் திட்டத்தினுடைய வழித்தடம். ஆகையினாலே, அவர்கள் பெலுகோடு ஏரியை இப்போது கட்டி முடித்திருக்கிறார்கள். எனவே, ராயலசீமா பகுதிக்குத் தண்ணீரைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கேள்வியிலே நம்முடைய ஆந்திர முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்றால்--உறுப்பினர் படித்த பத்திரிகையை நானும் படித்தேன், ஏனென்றால் சப்ஜெக்ட் இருப்பதினாலே உடனே படித்துவிட்டேன்--சென்னைக்குத் தண்ணீர் தருவீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். கண்டலேறு பகுதியிலிருந்து தமிழ்நாடு ஜீரோ பாயிண்ட் வரையில் இருக்கிற பகுதிகளில் சில வேலைகள் முடிய வேண்டும். அது முடிந்துவிட்டால் செப்டம்பருக்குள் சென்னைக்கு, தண்ணீர் தருவதிலே ஒன்றும் ஆட்சேபணையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு, நம்முடைய கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பார்க்கின்ற தலைமைப் பொறியாளர் அவர்கள், நேற்றைக்கு முன்தினம் தலத்துக்கு அனுப்பப்பட்டார்கள். சில பகுதிகளில் மட்டும் வேலைகள் பாக்கியிருந்தன. வேகமாக நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னதைப்போல், ஜூன் மாதம் வரும், ஜூலை மாதம் வரும் என்று 6, 7 முறை தவணைகளைச் சொன்னார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்றால், சில பகுதியிலே கால்வாயே வெட்டவில்லை. சில பகுதியிலே ரெகுலேட்டரே போடவேயில்லை. ஆனால் 3 வருடத்திற்கு முன்னாலேயே கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வரும் என்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது, கலைஞர் அவர்கள் எங்களுக்கு அளித்திருக்கிற கட்டளை, எப்படியும் இந்த நதிநீரை வேகமாகக்

[திரு. துரைமுருகன்] [1996 ஆகஸ்ட் 6

கொண்டுவர வேண்டுமென்பது. எனவே வேகமாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். நானே அவரிடத்திலே பலமுறை சொல்லி இருக்கிறேன். செப்டம்பருக்குள் வந்து விடும், செப்டம்பருக்குள் வந்துவிடும் என்று சொன்னால் கூட பதிலே பேச மாட்டார், கொண்டு வந்த பிறகு உறுதிமொழி கொடுக்கலாம் என்று. எனவே, எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கத் தக்க வகையில் செப்டம்பர் இறுதிக்குள் சென்னை நகருக்குக் கிருஷ்ணா நதி நீர் வரும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு என்னுடைய நிலையை விளக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தூக்கத்திலேகூட எல்லாப் பெயர்களையும் வரிசையாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த அவையைப் பொறுத்தவரை எந்த மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் வந்தாலும் எந்தக் கேள்விக்கும் பொதுப்பணித் துறை அமைச்சர் உடனே பதில் சொல்லத் தயாராக இருக்கிறார், நீங்கள்தான் தடையாக இருக்கிறீர்கள் என்று என் மீது குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இன்று காலையிலேகூட ரங்கநாதன் அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார், ஆகவே நான் கேட்கப் போகிறேன் என்றுதான் என்னிடம் வந்து கேட்டார்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அடுத்த சப்ஜக்ட்டிலே பேசுங்கள். கிளாரிபிகேஷன் கிடையாது. (குறுக்கீடு) நீங்கள் 250 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். தினம் ஒன்று நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். இன்னொரு உறுப்பினர் நிற்கிறார்.